# சிவகங்கை சீமையை மீட்ட வீரமங்கை வேலுநாச்சியார்

**முனைவர் சி. ரேணுகாதேவி**
*உதவிபோராசிரியர், வரலாற்றுத்துறை*
*சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர், சிவகங்கை மாவட்டம்*

நாட்டின் தென்பகுதியில் தமிழை வளர்ந்து மக்களின் நலனை காத்து நல்லாட்சியினை நடத்தி வந்தது இராமநாதபுரம் அரசு அதில் அடங்கிய சிவகங்கைச் சீமையானது போர் மறவர்கள் வாழ்ந்த புண்ணிய பூமியாகத் திகழ்ந்தது, வாளேந்தி போர் புரிவதில் வல்லவர்களான வீரர்கள் பலர் வாழ்ந்து மறைந்த நிலம் சிவகங்கைச் சீமை, தம் உயிரினும் மேலாக தாய்நாட்டைப் போற்றிய உத்தமரில் ஒருவர் தான் வேலுநாச்சியார் ஆவர்.

இராமநாதபுரம் மன்னர் செல்லமுத்து சேதுபதிக்கும் சக்கந்தி என்ற ஊரைச் சேர்ந்த முத்தாத்தாள் நாச்சியாருக்கும் கி.பி.1730-ஆம் ஆண்டு வேலுநாச்சியார் மகளாகப் பிறந்தார். சிவகங்கையின் அரசராக இருந்தவர் முத்துவடுகநாதப் பெரிய உடையாத் தேவர் அவருக்கு உதவியாக மருதுபாண்டியர்கள் இருந்து வந்தனர். மன்னர் முத்துவடுகநாதருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையோ போர் ஏற்பட்டது. இப்போரில் ஆங்கிலேயர் மருது சகோதரர்களை தனியே பிரித்து மன்னர் முத்துவடுகநாதரை 25.06.1972-ஆம் ஆண்டு மே மாதம் ஆங்கிலேயப் படையும். நவாப் படையும் சேர்ந்துக் கொண்டு காளையார்கோவிலைத் தாக்கினர். இந்த கடும்போரில் மன்னர் முத்துவடுகநாதர் பிரங்கித் தாக்குதலால் உயிர் இழந்தார்.

முத்துவடுகநாதர் இறந்தவுடன், கொல்லங்குடியில் தங்கியருந்த வேலுநாச்சியாரும் அவரது மகள் வெள்ளைச்சி நாச்சியாரும் பிரதானி தாண்டவராயபிள்ளை, மருதுசகோதரர்கள் ஆகியோரின் துணையுடன், திண்டுக்கலில் இருந்து வடகிழக்கே 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ள விருப்பாட்சிப் பாளையம் போய்ச் சேர்ந்தார். விருபாட்சி பாளையக்காரர் கோபாலநாயக்கர் மிகுந்த பாதுகாப்புடன் அங்கு தங்குவதற்கு சிறந்த முறையில் ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார், அப்பாளையம் மான உணர்வு மிக்க கம்பளத்து நாயக்கர்களைக் குடிமக்களாகக் கொண்டது.

இந்த சிறிய பாளையத்தை வேலுநாச்சியாரும் அவரது குழந்தையும் பாதுகாப்பாக இருப்பதற்கு ஏற்ற பொருத்தமான ஊராக பிரதானி தாண்டவராய பிள்ளை தேர்வு செய்தார். காளையார்கோவில் போரைப்பற்றிக் கேள்வியுற்ற அந்த ஊர் பாளையக்காரர் மிகுந்த அனுதாபத்துடன் சிவகங்கை ராணிக்கும் பிரதானிக்கும் தக்க வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததுடன். திண்டுக்கல் கோட்டைத் தளபதியும், மைசூர் ஐதர் அலியின் மைத்தனருமான சையத்சாகிபுக்கு அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தார்.

இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மறவர் சீமைகளில் இருந்து ஆற்காட்டு நவாப்பை துரத்தியடிப்பதற்கு படை உதவி கோரிய வேலுநாச்சியாரின் வேண்டுதலையும் சுல்தான் ஐதர் அலிக்கு பரிந்துரையுடன் அனுப்பி வைக்குமாறு செய்தார்.

சிவகங்கை பிரதானி தாண்டவராய பிள்ளை, 08.12.1772 ஆம் ஆண்டு ராணி வேலு நாச்சியார் சார்பாக சுல்தான் ஐதர் அலிக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார். அதில் ஆற்காட்டு நவாப், இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய இரு தன்னரசுகளையும் ஆக்கிரமித்து அழிவை ஏற்படுத்தி வருகிறார். ஆகையால், தாங்கள் 5000 குதிரை வீரர்களையும், 5000 போர் வீரார்களையும் அனுப்பி வைத்தால் அவர்களது படிச் செலவை நான் ஏற்றுக்கொண்டு

அவர்களுடன் இணைந்து இந்த இரு சமஸ்தானங்களையும் மீண்டும் கைப்பற்ற இயலும். அத்துடன் மதுரைக்கும் படைகளை அனுப்பி வைத்து அந்த சீமை முழுவதும் எதிர் நடவடிக்கைகளைத் தொடங்கி வைக்கவும் இயலும். அங்குள்ள பாளையக்காரர்களும் நமக்கு ஒத்துழைப்பு நல்குவார்கள். தங்களுக்கு செலுத்த வேண்டிய நஜர் பற்றி பின்னர் முடிவு எடுத்துக் கொள்ளலாம்.

இந்தக் கடிதம் அனுப்பிய பொழுது, பிராதானி, தொண்டமான் நாட்டில், சிவகங்கைச் சீமையை ஒட்டியப பாய்க்கடி என்ற கிராமத்தில் தென்னந்தோப்பு ஒன்றில் தங்கி இருந்தார். சிவகங்கைச சீமை நடப்புகளை விருப்பாட்சியில் உள்ள ராணி வேலுநர்சிசயாருக்கு தகவல் கொடுத்துக் கொண்டிருந்தார்.

தஞ்சாவூராரும் தொண்டமானும் இணைந்து நமக்கு படையும் பொருளும் வழங்க சம்மதித்து உள்ளனர். மைசூர் மன்னர் ஐதர் அலிகானின் படையும் இங்கு வரவிருக்கின்றது. ஆதலால், உங்களால் இயன்ற அளவு போர் வீரர்களையும் படைக் கலங்களையும் சேகரித்துக் கொண்டு நாம் எல்லோரும் இணைந்து இராமநாதபுரத்தையும், சிவகங்கையையும் திரும்ப கைப்பற்றி விடலாம் மறவர் சீமை முழுவதையும் மீட்பதற்கு திட்டமிட்டு இருப்பதைத் தெரிவிக்கும் செய்தியைக் கொண்ட அவரது ஓலை ஒன்று நவாப்பின் பணியாளரான தொண்டி அமில்தார் கையில் சிக்கியது. மறவர் சீமையை மீட்பதற்கு பிரதானி தாண்டவராயபிள்ளை மறைமுகமான முறையில் இயங்கி வருகிறார் என்பதை அப்பொழுதுதான் கம்பெனியார் உணர்ந்தனர்.

நவாபின் மகன் உம்தத்துல் உம்ராவுக்கு இந்த தகவல் கிடைத்தவுடன் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட்டார். இரவு பகல் என்ற பாராது பிரதானியார் முயற்சியை தோல்வியுறச் செய்ய முயன்றார். தளபதி நஜீர்கான், தளபதி பௌஷேர் ஆகியயோரது துணைகொண்டு கிளர்ச்சிக்காரர்களை தேடிப்பிடிப்பதிலும், கோட்டைகளை வலுப்படுத்துவதிலும் ஈடுப்பட்டார்.

ஆங்கிலேயக் கம்பெனிப் படைகளிடமிருந்து காளையார் கோவிலை மீட்க ஒரே வழி, ஆங்கிலேயரை எதிரியாக எண்ணிப் போரிட்டு வரும் மைசூர் மன்னர் ஐதர் அலியின் ஆதரவைப் பெறுவது தான் என்னும் ஆலோசனையை வேலுநாச்சியாரிடம் தாண்டவராயப் பிள்ளை தெரிவித்தார். அது தான் சரியான வழி என்று வேலுநாச்சியாரும் மருது சகோதரர்களும் ஒப்பக்கொண்டனர்.

ஐதர்அலியின் ஆதரவு கிடைக்கும் வரை திண்டுக்கல் அருகே உள்ள விருப்பாட்சிக் கோட்டையில் வேலுநாச்சியார் தங்குவதெனவும், அவர் மகள் வெள்ளச்சி நாச்சியாரை மருது சகோதரர்கள் பார்த்துக் கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. பிரதானி தாண்டவராய பிள்ளை உடல் நலிவுற்றது. மண்ணின் மீதும் மன்னர் மீதும் மாறாத அன்பு கொண்டு தளராது உழைத்த தியாகி தாண்டவராயப் பிள்ளை தனது 73-ஆம் வயதில் காலமாணார்.

பிரதானி தாண்டவராயப் பிள்ளையின் மரணம், தமக்கும் சிவகங்கைச் சீமைக்கும் ஏற்பட்ட மிகப்பெரிய இழப்பு என்பதை ராணி வேலுநாச்சியார் உணர்ந்தார். வேதனையால் துடித்தார். கணவரது வீரமணத்திற்கு பிறகு அவரையும் அவரது குழந்தையையும், காப்பாற்ற வேண்டும் என்ற உயர்ந்த இலக்கினை கொண்டிருந்தார்.

விருப்பாச்சி வாழ்க்கைக்கு மைசூர் மன்னரது அனுதாபமும் ஆதரவும் பின்னணியாக இருந்த போதிலும், விரைவில் தாயகம் திரும்பி விடலாம் என்ற வலுவான நம்பிக்கையை வளர்த்து ஊக்குவித்து வந்ததும் ஆற்காட்டு நவாப்புக்கு எதிராக சிவகங்கை மக்களைத் திரட்டும் கடுமையான முயற்சியில் காலமெல்லாம் ஈடுபட்டு இருந்தபோதும், வாரம் தவறாமல்

விருப்பாட்சிக்கு வந்து சிவகங்கைச் சீமையின் நடப்புகளை ராணியாருக்க தெரிவிப்பதை வழக்கமாக கொண்டிருந்த பிரதானி இறந்து விட்டார்.

பிரதாணி தாண்டவராய பிள்ளை விட்டுச் சென்ற பணிகளை, குறிப்பாக சிவகங்கை சீமையின் நாட்டார்கள் சேர்வைக்காரர்களுடன் ஒலைத் தொடர்புகளைத் தொடர்ந்து வந்தார். தமது கணவருக்கு விசுவாசத்துடன் பணிகள் ஆற்றி வந்த அந்தரங்கப் பணியாளர்களான மருது சேர்வைக்காரர்களையும் வேலுநாச்சியார் தமது புதிய அரசியல் பணியில் ஈடுபடுத்தினார்.

தியாகி முத்து வடுகநாதர் சிந்திய இரத்தத்திற்கப் பழி வாங்கவேண்டும். காளையார் கோவில் போர்க்களத்தில் பெற்ற களங்கத்தினை அழித்து விட்டு புதியதோர் வரலாற்றினை படைக்க வேண்டும் என்பதே அவர்களது குறிக்கோளாக இருந்தது, விருபாட்சி பாளையத்தில் சிவகங்கை மறவர்களது நடமாட்டம் அதிகரித்தது. வேலு நர்ச்சியாரது நம்பிக்கையும் வலுத்தது. சிவகங்சை் சீமையை மீட்டு விடலாம் என்ற உறுதியும் அவரது உள்ளத்தில் நிலைத்தது,

ஆங்கில பரங்கிகளையும், ஆற்காட்டு நவாப்பையும், ஒரே நேரத்தில் அழித்து ஒழிக்கும் திட்டம் ஒன்றினை மேல் நடத்தவதற்கு மைசூர் மன்னர் ஐதர்அலி ஆயத்தமானார். அப்பொழுது சிவகங்கை சீமையை, ஆற்காட்டு நவாப்பின் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்டுவதற்கு உதவும் படைகளையும் திண்டுக்கல் கோட்டையில் இருந்து பெற்றுக் கொள்ளுமாறு மைசூர் மன்னர் சிவகங்கை வேலுநாச்சியருக்கு தெரிவித்தார்.

ஒரு நாள் வேலுநாச்சியார்-ஐதர்அலி சந்திப்பு திண்டுக்கல் கோட்டையில் நடந்தது. உலகையே ஆட்டிப் படைக்கும் கும்பெனியாரை பழிவாங்கி நாட்டை மீட்க துடிக்கும் வேலுநாச்சியாரின் வீரத்தைக் கண்டு ஐதர் அலி வியந்து போனார். பொருளாதார பலமும் ஆயுத பலமுமிக்க கும்பினப் படையினையும் நவாப் படையினையும் வெறும் ஒற்றைக் குதிரை ஏறி போரில் எதிர் கொள்வது புத்திசாலித்தனம் அல்ல. ஆகவே தான் ஆழமாக சிந்தித்து வேலுநாச்சியார் இந்த முடிவினை எடுத்தார்.

தன்னுடைய கோட்டைக்கு வந்த வேலுநாச்சியாரை மைசூர் மன்னர் ஐதர் அலி வாசல்வரை வந்து வரவேற்றார். தனியொரு மறக்குல மங்கையர் கும்பெனியாரை போர் முகத்தில் வெற்றி கொள்ளும் வீரம் வேலுநாச்சியாருடைய பேச்சிலும், எண்ணத்திலும் வெடித்துக் கிளம்பியதைக் கண்டு வியந்து போனார் ஐதர் அலி. ஐதர் அலியுடன் உருது மொழியிலேயே வேலுநாச்சியார் உரையாடியதை கண்டு அசந்து போனார். வேலுநாச்சியாருக்கு உதவி செய்ய ஐதர் அலி உறுதியளித்தார்.

விருப்பாட்சிக் கோட்டையில் ஐதர் அலி வேலுநாச்சியாருக்கு சகல விதமான போர்ப்பயிற்சியையும் அளித்தார். அது மட்டுமின்றி முஸ்லீம் மதத்தினரான ஐதர் அலி ஆன்மீகப் பற்று மிகுந்த ராணி வேலுநாச்சியார் வணங்கி வழிபட இராஜேஸ்வரி அம்மன் திரு உருவச்சிலையை உருவாக்கிக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தார்.

வேலுநாச்சியார் அரசியல் சதுரங்கத்தில் முக்கியமானவர்களாக விளங்கியவர்கள் தான் வரலாற்றில் புகழ் பெற்ற விடுதலை வேங்கை பெரிய மருது, சின்ன மருது எனப்படும் மருது பாண்டியர்கள் ஆவார்கள். வெள்ளைக்காரர்களை ஒழிப்பதில் தீவிரமாக இருந்த ஐதர் அலி மருது சகோதரர்களையும் வேலு நாச்சியாரையும் பாராட்டினான். ஐதருக்கும் சிவகங்கையின் மீது ஒரு கண் உண்டு இதை மருது சகோதரர்கள் அறிந்தே இருந்தனர்.

வெள்ளைக்காரனை விரட்ட எங்களுக்கு உதவி செய்யுங்கள் போதும் மற்ற வேலைகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். யாருக்கும் எங்கள் மண்ணை நாங்கள் விட்டுக் கொடுக்க

மாட்டோம் எங்கள் உயிரைக் கொடுத்து நாட்டைக் காப்போம் என்று பெரிய மருது அவரிடம் கூறினார்.

அவருடைய வீரம் செறிந்து பேச்சைக் கேட்டு ஐதர் அலி பெரிதும் மகிழ்ந்தான், எல்லா உதவிகளையும் செய்வதாகவும் உடனே புரட்சியைத் தூண்டி விடுமாறும் கூறினான். ஐதர் அலியின் உறுதி மொழியை ஏற்ற அதன் படி, வேலுநாச்சியார் தனக்கு வேண்டிய பணிப் பெண்களுடனிம் வீரர்களுடனும் ”விருப்பாட்சிக்கோட்டை” திண்டுக்கல் கோட்டை முதலியவற்றில் பாதுகாப்பாகத் தங்கினார். மருது சகோதர்களின் துணைக் கொண்டு பிரான்மலை சந்துரு சங்காராக் கோட்டை, சங்கரபதிக் கோட்டை முதலிய மறைவிடங்களில் வீரர்களுக்கு படைப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார். வேலுடித்தம்மம், திருப்பாசேத்தி சிங்கம்புணரி முதலிய ஊர்களில் போர்க்கருவிகள் செய்யப்பட்டன.

அவருடைய இலட்சியம் கும்பினப் படையைக் குலைப்பது நயவஞ்சக நவாப்பை வீழ்த்துவது சிவகங்கைச் சீமையில் அனுமான் கொடியைப் பறக்க விடுவது என்பதாகும். முன்னேற்பாடுகள் அனைத்தும் தயாரானதும் வேலுநாச்சியார் கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகளுக்கச் சிவகங்கையைத் தம்மிடம் ஒப்படைக்கமாறு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார். இதே நேரத்தில் ஐதர் அலியும், அவருக்குப்பின் அவனுடைய மகள் திப்புவும் பிரிட்டிஷ் படைகளை எதிர்த்து வெற்றி பெற்று வந்தனர்.

இவர்களைச் சாமாளிப்பதற்கே ஆங்கிலேயருக்கு பெரும் படை தேவைப்பட்டது தாமாக கொடுக்காவிட்டால் சிவகங்கையைப் புரட்சி செய்து வேலுநாச்சியார் வெற்றி பெற்று விடுவார் என்பது ஆங்கில அதிகாரிகளுக்கப் புரிந்தது அதே நேரத்தில் மருது சகோதார்களைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற ஒரு நிபந்தனையை விதித்தனர். அதற்கு வேலு நாச்சியார் இணங்கவில்லை. உடனே போர் உச்சகட்டத்திற்கு ஆயத்தமானது.

ராணி வேலுநாச்சியார் சார்பில் பிரதானி தாண்டவராய பிள்ளை படை உதவி கேட்டு மைசூர் மன்னர் ஐதர் அலிக்க 1772-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ம் தேதி ஒரு கடிதம் அனுப்பினார். 7 ஆண்டுகள் கழித்து பிரதானி இறந்த பின்பு இக்கடிதத்திற்கு பலன் கிடைத்தது. கி.பி.1780-ல் மருதுபாண்டியர் உதவியால் ஐதர் அலியிடம் இருந்து ராணி வேலுநாச்சியார் படை உதவி பெற்றார். அதாவது குதிரை படை ஒன்றை வேலுநாச்சியாருக்கு உதவியாக அனுப்பி வைக்கும்படி மைசூர் மன்னர் ஐதர் அலி திண்டுக்கல்லிருந்து தனது கோட்டைத் தளபதிக்கு உத்தரவிட்டார்.

உடனே அந்த மறவர் படையுடன் ராணி வேலுநாச்சியார் காளையார் கோவிலை நோக்கி முன்னேறினார். இப்படையினரின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் கும்பினிப் படையும், ஆற்காடு நவாப் படையும் நிலை குலைந்தன. காளையார்கோவில் போரில் தன் கணவரைக் கொன்ற ஆங்கிலப் படைகளைப் பழிவாங்க வேண்டும் என்ற வெறியுடன் போரிட்டார். ராணி வேலுநாச்சியார் போரில் ஆங்கிலப்படை படுதோல்வி அடைந்தது.

காளையார்கோவில் கோட்டைத் தளபதி ஜோசப் ஸ்மித் போர்க் களத்தை விட்டே ஒடிவிட்டான். காளையார் கோவிலை எதிரிகளிடமிருந்து மீட்ட ராணி வேலுநாச்சியார் தனது வீர சபதத்தை நிறைவேற்றிக் கொண்டர். அதாவது மதுரை ”கோச்சடை” என்னுமிடத்தில் ஆற்காட்டு நவாபின் படைகளைத் தவிடு பொடியாக்கினார், மானாமதுரையில் கும்பினிப்படைகளை விரட்டியத்தார்.

சிவகங்கை செல்லும் வழியில் அரியாகுறிச்சி அய்யனார் கோவிலுக்கு வேலுநாச்சியார் சென்றார். தம்மைக் காட்டிக் கொடுக்க மறுத்து வெள்ளையரால் வெட்டுப்பட்டு மாண்ட உடையாளுக்கு, வீரக்கல் ஒன்றை நட்டு அஞ்சலி செலுத்தினார். உடையாளுக்குத் தொடர் பூஜை செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டு தமது திருமாங்கல்யத்தை

வேலுநர்ச்சியார் முதல் காணிக்கையாகச் செலுத்தினார். இந்தக் கோவில் ”கொல்லங்குடி” வெட்டுடையார் காளியமமன் என்று அழைக்கப்படுகிறது வேலுநாச்சியார் வழங்கிய வைரத்தாலி இப்போது இந்தக் கோவிலில் இருக்கிறது.

பின்னர் வேலுநாச்சியர் தனது படைகளை "சிவகங்கைப்பிரிவு" "திருப்பத்துார்பிரிவு" "காளையார்கோயில்பிரிவு" என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்தார். முக்கிய தளபதிகள் அனைவரையும் ஒன்று கூட்டினார். வேலு நாச்சியார் வெள்ளையர்களை வீழ்த்த 30,000 பெண்கள் படையைத் திரட்டி அதனை இரு அணிகளாக வகுத்து ஒன்று வீரப்படை, மற்றொன்று சேரப்படை என்று பெயர் சூட்டி, அப்படைகளில் சிவகங்கை கோட்டையைத் கைப்பற்றும் பிரிவுக்கு அவரே தலைமை ஏற்றார்.

மூன்றாயிரம் வீரர்களோடு எட்டு பீரங்கிகளோடும் சின்ன மருது தலைமையில் திருப்பத்துார் நோக்கிப் புறப்படட்டும் என்றார், பெரிய மருது தலைமையில் நான்கு பீரங்கிகளோடும் சிவகங்கை சென்று அரண்மனைக்கு வெளியே உள்ள தெப்பக்குளக்கரையில் உள்ள உமராதுல் உபகரணங்களையும், அவனது படைகளையும் வெல்லப் புறப்படட்டும் என்றார்.

சிவகங்கைச் கோட்டையைப் பிடிக்க வேலுநாச்சியார் அமைத்த படையில பெண்கள் அடங்கிய படைப்பிரிவும் இருந்தது. சிவகங்கை கோட்டையை ஆங்கிலப் படை பீரங்கிகளுடனும் துப்பாக்கிகளுடனும் காவல் காத்து வந்தன. அப்பொழுது விஜயதசமி விழா இரண்டு நாள் கழித்துக் கொண்டாடப்படுவதாக இருந்தது.

வேலுநாச்சியார் சிவகங்கைக் கோட்டைகையக் கைப்பற்றுவேன் என்று கூறிய பொழுது பெண் படையை வைத்துத் தங்களால் எப்படி முடியும் என்று சின்னமருது கேட்டார். அப்போது ”தளவாய் பெரிய மருது அவர்களே” என்று தள்ளாத கிழவியின் குரல் கேட்டது. அக்குரல் வந்த திசையை நோக்கினார்கள் அம்முதியவள் ”இப்பொழுது நவராத்திரி விழா நடைபெறுகிறது மறுநாள் விசயதசமி, அன்ற சிவகங்கைக் கோட்டையில் உள்ள ராஜராஜேஸ்வரி அம்மதைத் தரிசிக்க, கொலுவைப் பார்க்க, பெண்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது. இதைப் பயன்படுத்தி வேலுநாச்சியாரும் பெண்கள் படையும் கோட்டைக்குள் புகுந்து விடலாம் வெற்றி நமதே என்ற கூறினாள். சிவகங்கைக் கோட்டையை உளவு பார்க்க அனுப்பப்பட்ட உயர்தோழி தான் குயிலி என்பதை அனைவரும் உணர்ந்தனர். வேலுநாச்சியார் கூறியது போலவே சின்ன மருதும், பெரிய மருதும் போருக்கச் சென்றனர்.

விஜயதசமியன்று கோட்டையிலுள்ள நிலா முற்றத்தில் ஆயுதங்களையெல்லாம் வழிபாடு செய்வதற்காக அவை குவித்து வைக்கப்பட்டிருந்தன. அதைக் கண்ணுற்ற குயிலி தன்மனதில் ஒரு திட்டம் தீட்டிக் கொண்டாள். பூஜை முடிந்த மறுகணமே அனைவரையும் வெளியேற்றிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு வேலுநாச்சியார் ராஜேஸ்வரியை வணங்கிய வண்ணம் நின்ற நிலையிலேயே வீரவேல் வெற்றிவேல் என்ற முழக்கமிடவும், பெண்கள் படை வெள்ளையர்கள் அனைவரையும் வெட்டிச் சாய்த்தது.

ராணி வேலுநாச்சியாரின் மகளிர் படைப் பிரிவினர் கும்பினிப் படை வீரர்களை வாளாலும், கத்தியாளும் தாக்கினர். விசயதசமி பூஜைக்காக ஆயுதங்கள் அனைத்தும் கோட்டையின் முற்றத்தில் வைக்கப்பட்டிருந்தன. எனவே கும்பினிப் படை வீரர்களில் ஒரு சிலரிடம் மட்டுமே ஆயுதங்கள் இருந்தன. அந்த நிலையில் ராணியின் பெண்கள் படையினரை எதிர்த்து தாக்குதல் நடத்துவதற்கு ஆயுதங்களை எடுக்க முற்றத்தை நோக்கி குமப்பினிப் படையினர் ஓடினர். ”சார்ஷ்” என்று பான்சோர் தொண்டை கிழியக் கத்தினான்.

இரண்டு கைத் துப்பாக்கிகளை எடுத்துச் சுட ஆரம்பித்தான்.

பான் சோரைப் பிடிக்க மேல் மாடத்திற்க சென்றார். வேலு நாச்சியார் அப்போது ஒரு பெண் தன் உடல் முழுவதும் எரியும் தீயோடு ”வீரவேல் வெற்றிவேல்” என்று கூறிக்கொண்டே நிலா முற்றத்தில் குவித்து வைத்திருந்த ஆயுதக் கிடங்கிலே குதித்தாள் அந்தக் கிடங்கானது தீப்பற்றி எரிந்தது. வெள்ளையரின் ஆயுதங்கள் அனைத்தும் ஓசையுடன் நாற்புரமும் சிதறி வெடித்தன ஆயுதம் எடுக்க வந்த கும்பினிப்படைவீரர்கள் பலர் தீயில் வெந்து மாண்டனர். இரதக் கண்டதும், பான்ஜோர் தப்பி ஓடினான். வேலுநாச்சியார் பான்சோரை வளைத்துப் பிடித்தாள் கோட்டை வேலுநாச்சியார் வசமானது.

இந்த போருக்குக் காரணமான குயிலிக்குப் பரிச தர வேண்டும் என்றபோது அதைக் கேட்ட மருதாயி என்ற வீராங்களை குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள். என்ன மருதாயி என்ன நடந்தது என்று கேட்டார் வேலுநாச்சியார், அதற்கு மருதாயி மகாராணியே, போர் ஆரம்பித்ததும் குயிலி வேகமாகக் கோயிலுக்கு ஓடினாள்.

அவளைப் பார்க்க நானும் பின்னாலேயே சென்றேன் கோயில் விளக்குக்காக வைத்திருந்த நெய்யைத்தன் உடல் முழுவதும் ஊற்றிக் கொண்டாள். கோயிலில் இருந்த பந்தத்தை எடுத்துக் கொண்டு அரண்மனையின் உட்பரிக்கைக்குச் சென்றான். அங்கிருந்து தன் உடலில் தானே தீ வைத்துக் கொண்டு ஆயுதக் குவியலில் குதித்தாள்.

தன் உயிரைக் கொடுத்து அந்நியர் ஆயுதங்களை தீக்கரையாக்கினாள் குயிலி என்று கூறினார். மானங்காக்க போரிட்ட மறவர் சீமையிலே விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்த தாழ்தப்பட்ட சமுதாயப் பெண்மணி குயிலியை எண்ணி வேலுநாச்சியார் கண் கலங்கி அழுதார். சிவகங்கை சீமையே அழுதது. நாட்டின் விடுதலைக்காக ”முதல் மனித வெடி குண்டாக” மாறினார்.

சிவகங்கை சீமை கி.பி.1780-ம் ஆண்டு நவாபிடமிருந்து மீட்கப்பட்டதும். மக்கள் திரளாக வந்திருந்து வேலுநாச்சியாருக்கு வரவேற்பு அளித்தானர். மருது சகோதரர்களின் ஏற்பாட்டின் படி இது நடந்தது வேலு நாச்சியார் வாழ்க என்ற எங்கும் முழக்கம் ஒழித்தன. யானை மீது அம்பாரி வைத்து ராணி கம்பீரமாக ஊர்வலம் வந்தாள், மருது சகோதரர்கள் இருபுறமும் புடை சூழ வந்தனர். மறவர் படை வெற்றி வாகைசூடி வந்தது. வேலுநாச்சியார் வாழ்க மருதிருவர் வாழ்க என்று பொதுமக்கள் ஆரவாரித்தனர்.

பானஜோர் வேலுநாச்சியாரிடம் உயிர் பிச்சை கேட்டான். இப்போது வேலுநாச்சியார் தன்னை உயிரோடு விட்டால் தானும் தனது படைகளும் புதுக்கோட்டைக்குச் சென்று விடுவோம். அதன் பின் புதுக்கோட்டைக்கத் தெற்குப் பக்கத்தில் தலை வைத்துப் படுக்க மாட்டோம் என மன்றாடிக் கேட்டான். அத்துடன் சிவகங்கை அங்கீகாரம் செய்யுமாறு மேலிடத்திற்கு எழுதி சிவகங்கையை நேச நாடாகப் பார்க்க ஆணை செய்வதற்காகப் பான்ஜோர் உடன்படிக்கை செய்து கொண்டான். வேலுநாச்சியார் அவன் உடன் படிக்கையை ஏற்றுக் கொண்டார். மானாமதுரைப் போர்களத்தில் தன்னிடம் ஆயுதமின்றி மாட்டிக்கொண்ட இருபத்து மூன்று வயதான இளைஞன் வெள்ளைத் தளபதி மார்ட்டின் என்பவனை கொல்லாமல் மன்னித்து உயிர் பிழைத்துச் செல்ல உதவினார்.

இந்த சாகசங்களை வேலுநாச்சியார் செய்தபோது அவருக்கு வயத ஐம்பது. சிவகங்கைக் கோட்டை மீது பறந்த கும்பினிக் கொடி இறக்கப்பட்டது. அனுமன் கொடி ஏற்றப்பட்டது.

ஒரு பெண் போர்களத்தில் ஆங்கிலேயரை எதிர்த்து அவர்களின் வலிமை வாய்ந்த படையையும் புறங்கண்டு வாகை சூடியது ஒட்டு மொத்த இந்திய வரலாற்றில் காணமுடியாத ஒன்றாகும். மறத்தமிழச்சி என்றால் அது வேலுநாச்சியாருக்கே பொருந்தும்.

**மேற்கோள்கள்**

1. கமால், எஸ். எம். (1997). *சீர்மிகு சிவகங்கைச்சீமை*. ஷர்மிளா பதிப்பகம்.
2. பாலகிருஷ்ணன், மு. (2000). *விடுதலைபோரின் விடிவெள்ளிகள்*, அன்னை பதிப்பகம்.
3. மங்களம், நா. (2008). *வீரமங்கை ராணி வேலுநாச்சியார்*, ஈ.வெ.ரா. பதிப்பகம்.
4. சரளா இராசகோபாலன். (2002). *காலம்வென்ற தமிழக மகளிர்*. ஒளிப் பதிப்பகம்.
5. காண்யா சண்முகசுந்தரம், சு. (2008). *வேலுநாச்சியார்*. முனி பதிப்பகம்.
6. நடராஜன், ம. (2005). *விடுதலைப்போரில் வேலுநாச்சியார்*. தமிழ் அரசிப்பதிப்பகம்.
7. மனோகரன், மீ. (1994). *மருது பாண்டிய மன்னர்கள்*. பழனியப்பா பதிப்பகம்.
8. மணிமேகலை, சே. (2006). *வீரதிலகம் வேலுநாச்சியார்*. ஆதிபராசக்தி பதிப்பகம்.
9. கிருட்டிணமூர்த்தி, செ. ஆ. (2004). *விடுதலைவேள்வியின் விழுதுகள்*. மகாலெட்சுமி பதிப்பகம்.
10. பைம்பொழில்மீரான். (2007). *தலைநிமிர்ந்த தமிழச்சிகள்*. தோழமை பதிப்பகம்.
11. ஜெகாதா. (2005). *உலகை உலுக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள்*. தமிழன் பதிப்பகம்.
12. ஜீவபாரதி, கே. (2004). *வேலுநாச்சியார்*, குமரன் பதிப்பகம்.
13. ஈசாந்தி மங்கலம் முருகேசன். (2005). *பெண் சாதனையாளர்கள்*. வி.வி. ராஜன் பதிப்பகம்.
14. சண்முகநாதன், ஜ. (2005). *உலக வரலாறு*. தமிழ்தாய் பதிப்பகம்.
15. சேகர், மு. (1990). *வீரம் விளைந்த சிவகங்கைச் சீமையின் செம்மல்*. அன்னை பதிப்பகம்.